ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2024), மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்] [2024 ஜூன் 29

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். ஆகவே, இந்த சட்டமுன்வடிவை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமை வயதடையாத குழந்தைகள், இந்தச் சொற்றொடர் மற்றும் உரிமை வயதடையாத பேரக் குழந்தைகள் என்பதற்கான சொற்றொடரை மாற்ற இப்போது சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் இதை வரவேற்கிறேன். ஆனால், அதேவேளையில், கடந்த காலங்களில் 1961 ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டத்தின்படி, சென்னை உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களில் வழங்கப்பட்ட நிலங்களில் வீடு கட்டி ஆண்டாண்டுக் காலமாக மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். நகராட்சி, ஊராட்சிகளில் உரிய அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், இத்தனை ஆண்டுக் காலம் அவர்களுக்கான பட்டா வழங்கப்படவில்லை. இதுகுறித்து நான் கடந்த கூட்டத்தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். நீங்கள் அறிவிப்பிலும் அதற்கான அறிவிப்பை வெளியிட்டீர்கள். ஆனால், . . .

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சட்டமுன்வடிவு குறித்து உள்வாங்கிக் கொள்ளவும். இது உச்சவரம்பு குறித்து Bill. நீங்கள் பட்டா கேட்கிறீர்கள்.

@ 29-6-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2024 ஜூன் 29]

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சவரம்பு சட்டத்தில்தான் பட்டா கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் ஏற்கெனவே discuss செய்திருக்கிறேன். ஆகையால்தான் பேசுகிறேன். அறிவிப்பு வெளியிட்டுவிட்டீர்கள். ஓராண்டு ஆகிவிட்டது. இன்னும் அந்த மக்களுக்குப் பட்டா கிடைப்பதற்கான அரசாணை வெளியிடப்படவில்லை. ஆதலால், இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கின்ற அதே வேளையில், இந்த நில உச்சவரம்பிற்குக்கீழ் நிலம் வாங்கிய மக்களுக்கு உடனடியாகப் பட்டா கிடைப்பதற்கு உரிய ஆவன செய்ய வேண்டும். அந்தத் தொகை நிர்ணயிப்பு நடைபெறுகிறது. அது தற்போது அதிகமாக நிர்ணயித்திருப்பதாகவும் செய்திகள் பரவுகின்றன. ஆகையால், ஏழை மக்கள் பட்டா பெறுவதற்கு ஏதுவாக, அந்தத் தொகையை நிர்ணயிக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதற்கு முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், இரண்டு ஏக்கர் நிலம் ஏழைகளுக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டு, நிலம் வழங்கப்பட்டது. மக்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பு ஏற்பட்டிருந்தது. அதற்குப் பிறகு அவையெல்லாம் முடக்கிவைக்கப்பட்டுவிட்டன. அது black list என்று சொல்லி, அதிகாரிகளிடம் சென்று கேட்டால், ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று சொல்கிறார்கள். நிலம் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது; அனுபோகத்தில் இருக்கிறது. ஆனால், அதற்குப் பட்டா இல்லை. ஆகவே, ஏற்கெனவே கலைஞர் அவர்கள் காலத்தில் வழங்கப்பட்ட அந்த நிலங்களுக்கு பட்டா வழங்குவதற்கு திருத்தங்கள் கொண்டு வரவேண்டும். அதேநேரத்தில், காலம் காலமாக 50 வருடங்கள், 100 வருடங்கள் அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்ய திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னது, கடந்த 10 ஆண்டுகளில்

கலைஞர் அவர்கள் கொண்டு வந்ததால், நீங்கள் சொன்னபடியும் நடந்திருக்கிறது; Court-லும் இருக்கிறது. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் நாகைமாலி அவர்களுக்கு, இந்தச் சட்டம் கொண்டு வந்ததற்குக் காரணம், கல்யாணம் ஆகாமல் ஒரு வீட்டில் பெண் இருந்தால், குடும்பமாக வைத்துக்கொள்கிறோமேயொழிய, அவர்களுக்குத் தனியாகச் சொத்து கொடுப்பதில்லை. 18 வயது ஆனவுடன் ஆண் குழந்தையாக இருந்தால், தனியாக சொத்து வந்துவிடும் என்பதால்தான், ஆணும், பெண்ணும் சமம் என்பதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதுவும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த நீங்கள், இதில் எங்களோடு சேர்ந்து உடன்பாடாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கேட்பது ULC. File move ஆகிக்கொண்டிருக்கிறது. Urban Land Ceiling-ஐத்தான் அண்ணாச்சியும் நீங்களும் கேட்டது. அதற்கான file move ஆகிக்கொண்டிருக்கிறது. Rate difference வருகிறது. 2008-ல் தலைவர் கலைஞர் போட்ட G.O.-இன்றைக்கு current date-ல் போடும்போது, rate கூடவேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் கருத்து வித்தியாசம் இருக்கிறது. சென்ற முறையே, அதனை அறிவித்துவிட்டோம். இன்னும் ஒரு வாரம், பத்து தினங்களுக்குள் அதற்குரிய அறிவிப்பு வரும். ஆகவே, இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

2024 ஜூன் 29] [பேரவைத் தலைவர்]

பிரிவு 2-ல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர்கள், கொஞ்சம் அமைதி காக்கவும்.

(ஓ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2024), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 28-6-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS